# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2008, சனவரி மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

# 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. (கூட்.) 21/2004

## ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

"ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் இலங்கை பத்தேகமவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழும் இடைய றாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக விருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக் ஸ்ரீ சறனங்கர அபிவிருத்தி மன்றதைக் கூட்டிணைத்தல்.

கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) ஸ்ரீ சறனங்கர மன்ற உறுப்பினர்களின் பொருளாதார, சமூக நிலையை உயர்த்துதல் ;

(ஆ) மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதலும், சிக்கனம் செய்யும் பழக்கத்தை அபிவிருத்தி செய்தலும்;

(இ) அங்கவீனரின் பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்தல் ;

(ஈ) மன்ற உறுப்பினரின் சுயதொழில்களில் ஈடுபட ஊக்குவித்தல் ;

(உ) குழந்தைகளினதும், முதியோரினதும் தராதர மேம்பாடு கருதி பாடசாலைகளையும், நூல் நிலையங்களையும் நிறுவி கொண்டுநடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயலாற்றுதலும், பங்குபற்றுதலும் ;

(எ) இலங்கையில் அல்லது வேறேதேனுமொரு இடத்தில் மாநாடுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், கூட்டுக்கல்வி, விரிவுரைகள் போன்றவற்றை நடாத்துதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைப் பரப்பவும் மேம்படுத்தவும் தேவையெனக் கருதும் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், பத்திரிகைகள், புதினப் பத்திரி

கைகள், மஞ்சரிகளை அச்சிடுதல், வெளியிடுதல், விநியோகித்தல் ;

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவையேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்துடன் கீழ்க்காண் விடயங்களையும் மேற்கொள்ளுவதற்கான அதிகாரத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காகத் தேவைப்படும் காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், சுவீகரிப்பதற்கும், வாடகைக்கெடுப்பதற்கும் நிறுவுவதற்கும் அல்லது வேறுவகையில் பெறவும் ;

(ஆ) உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நிதியைக் கடன் பெறவும், கொடைகளையும், நன்கொடைகளையும் பரித்தியாகங்களையும் காசாகவோ, பொருட்களாகவோ பெற்றுக்கொள்ளவும் ;

(இ) கூட்டுத்தபானத்துக்குச் சொந்தமான அல்லது கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணி, ஏதேனும் கட்டடம் அல்லது அமைப்பைக் கட்டுவதற்கும் அல்லது கட்டுவதற்கு ஒழுங்கு செய்தலும் ;

(ஈ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள், வேறு கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடிய சாதனங்களைத் தயாரித்தல், எழுதுதல், கையேற்றல், கழிவுகளை வழங்குதல், கொடுக்கல் வாங்கல் செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், அத்துடன் வங்கியில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், முடிவுறுத்தவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதியை சபை பொருத்தமெனக் கருதும் வகையில் முதலீடு செய்தல் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்கு ஏற்புடைய நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், செயற்படுத்தவும், நிறைவேற்றவும், நிருவகிக்கவும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குவோர், சேவையாளர்கள் ஆகியோரை நியமனஞ் செய்யவும், சேவையில் ஈடுபடுத்தவும், பதவி நீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனம் தீர்மானிக்கக்கூடியவாறான சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்தலும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் ஆட்களைப் பயிற்றுவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தெரிவு செய்து நியமிக்கப்படும் பதவி தாங்குநர்களையும், ஏனைய ஆட்களையும் கொண்ட (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், கூட்டுத்தாபனத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையாக இருத்தல் வேண்டும்.

உறுப்பினர் பெயர்ப் பதிவேடு.

6. (1) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் உறுப்பினர்களாகவிருந்த ஆட்களினதும் பெயர்களும், இதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறையாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள் அடங்கிய பெயர்ப் பதிவேடொன்றைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ள வேண்டும்.

(2) உறுப்பினர் பெயர்ப் பதிவேடு பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்,—

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி, தொழில் ;

(ஆ) உறுப்பினர் பெயர் பெயரேட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி ;

(இ) எவரேனும் உறுப்பினரின் உறுப்பாண்மை முடிவுறுத்தப்பட்ட திகதி.

7. உறுப்பாண்மை இரத்தானது பின்வரும் காரணங்களிலொன்றினால் ஏற்படலாம் :— உறுப்பாண்மை இரத்து.

(அ) உறுப்பினரின் இறப்பின் மீது ;

(ஆ) விட்டு விலகுதல் ;

(இ) சித்தசுவாதீனமின்மை காரணமாக ;

(ஈ) ஏதேனும் விதிகளின் மீறுகை.

8. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் விடயங்களுக்காக, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவி விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) அவர்களின் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) சபையின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, கூட்டங்களைக் கூட்டி நடாத்துதல், அக்கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள், நேரம், அக்கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல்கள், கூட்ட நடப்பெண், இடம்பெறவுள்ள விடயங்களும், அக்கூட்டங்களை நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல், அதன் குறிக்கோள்களை எய்துதல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் இப்பிரிவின் (1) உட்பிரிவின்கீழ், ஆக்கப்பட்ட விதியொன்றென் றாற்போன்று, அதே போன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினரும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

9. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட

ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலதானவையும், மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலிருந்த மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க் கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாப னத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம் சொத்துக்களும், பொறுப்புகளும், அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக் காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக வும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக் காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப் பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ;அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்று வதியும் பங்காளர் ஒவ் வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவ கத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவை

யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**12.** கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு விதமாக அதற்குரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டப்படி இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதை விற்பதற்கு ஈடுவைப்பதற்கு, குத்தகைக்குக் கொடுப்பதற்கு, கொடுத்து மாற்றுவதற்கு அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுமான தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாதென்பதுடன், தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திகரமாகக் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளால் தடை செய்யப்பட்டுள்ளதோ அந்த வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம்

அல்லது கைமாற்றப்படலாம். கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் போது அல்லது கலைப்புக்கு உடன் முன்னர் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் மக்கள் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளப்பனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்